# ஜெயங்கொண்டம் நகராட்சி



# நிர்வாக அறிக்கை

## 2021–2022 ம் ஆண்டு

<u>மன்றப்பொருள்</u>

இந்நகராட்சியின் 2021-2022ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு பதிவு செய்யலாம்.

ஆணையாளர்
ஜெயங்கொண்டம் நகராட்சி

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
ஜெயங்கொண்டம் நகராட்சி

//உண்மை நகல்//

நகர் மன்ற தீர்மான எண். நாள் :

# ஜெயங்கொண்டம் நகராட்சி
# 2021 – 2022 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

நகரம்

- அரியலூர் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரம் ஜெயங்கொண்டமாகும். இந்நகரம் ஏற்கனவே பெரம்பலூர் மாவட்டத்தில் இணைந்திருந்த போது மேற்கில் மிக அதிய மக்கள் தொகை கொண்ட நகரமாக திகழ்ந்தது. இந்நகரம் வடக்கில் 11.218143 டிகிரி அட்ச ரேகையிலும் கிழக்கில் 79.367897 டிகிரி தீர்க ரேகையிலும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 65 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது.
- இந்நகரிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் ராஜராஜ சோழன் மகன் ராஜேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டு பதினொன்றாம் நுற்றாண்டின் நடுவில் இதனை முதலாம் ராஜேந்திர சோழன் தனது தலைநகரமாக ஆக்கினார். பதிமூன்றாம் நுற்றாண்டு வரை சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. இது உலகப் புகழ்பெற்ற சுற்றுலா தலமாகும்.
- இந்நகரின் வழியாக கும்பகோணம், சென்னை, திருச்சி, அரியலூர், விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய மாநில நெடுஞ்சாலைகள் செல்கின்றன.



***கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம்***

வெப்பநிலை

- இந்நகரத்தின் அதிகபட்ச வெப்பநிலை 80 டிகிரி சென்டிகிரேடாகவும் குறைந்த பட்ச வெப்பநிலை 101 டிகிரி சென்டிகிரேடாகவும் உள்ளது.

மழை வீழ்ச்சி

- இந்நகரம் வட கிழக்கு பருவ காலத்தில் மழை பெறுகிறது. ஆண்டுக்கு சராசரியாக 16 மி.மீ முதல் 22 மி.மீ வரை மழை பெறுகிறது.

## 1. அமைப்பும் மேலாட்சியும் ஆட்சி முறை

அ) இந்நகராட்சி கீழ்கண்டவாறு தோற்றுவிக்கப்பட்டு 2ம் நிலை நகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது.

| அரசாணை எண். மற்றும் நாள் | நிலை | முதல் |
|---|---|---|
| பேரூராட்சிகளின் இயக்குனர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:3603/2002 சி–1 நாள்:18.6.2004. | மூன்றாம் நிலை | **18.06.2004** |
| அரசாணை (நிலை) எண் .154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .09.08.2010 | இரண்டாம் நிலை | **09.08.2010** |

இந்நகராட்சி எல்லைக்குள் கீழ்க்கண்ட வருவாய் கிராமங்கள் உள்ளன.

1. 46 ஜெயங்கொண்டம் வருவாய் கிராமம்

1. செங்குந்தபுரம்
2. மேலக்குடியிருப்பு
3. மலங்கன்குடியிருப்பு

2. 45 அங்கராயநல்லூர் (மேற்கு) பகுதி வருவாய் கிராமம்

1. கரடிகுளம்.

3. 30 கல்லாத்தூர் (பகுதி) வருவாய் கிராமம்

1. மகிமைபுரம்
2. கொம்மேடு
3. கீழக்குடியிருப்பு

4. 31 பிராஞ்சேரி (பகுதி) வருவாய் கிராமம்

1. மணக்கரை

5. 43 பெரியவளையம் (பகுதி) வருவாய் கிராமம்

1. சின்னவளையம்.

நகராட்சியின் பரப்பளவு 28.49 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கை ஆண்டில் நகர எல்லையில் மாற்றம் ஏதுமில்லை.

| மக்கள் தொகை விபரம் | |
|---|---|
| 1991ம் ஆண்டு | **28227** |
| 2001ம் ஆண்டு | 31268 |
| 2011ம் ஆண்டு | 33945 |

## 2. தேர்தல்

1991ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 28227 ஆகும். இதனடிப்படையில் அரசாணை நிலை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.06.2004ல் இந்நகராட்சிக்கு நகரமன்ற உறுப்பினர் வார்டுகள் எண்ணிக்கை 21 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.09.2006ன்படி கீழ்கண்ட விவரப்படி வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (பொது) | 2 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (பெண்கள்) | 2 |
| பெண்கள் (பொது) | 5 |
| ஆண்கள் (பொது) | 12 |

## 3. நகரமன்றம்

***2022-ம் ஆண்டில்*** நகர்மன்ற தேர்தல் நடைபெ*ற்றது*. ஆணையாளர் தனி அலுவலர் பொறுப்பு வகிக்கிறார். அரசாணை (நிலை) எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.10.2016.

***அதன்படி, 21 வார்டுகளில் நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.***

**கூட்டங்கள்**

**2021–2022**ம் அறிக்கை ஆண்டில் தனி அலுவலர் அவர்களால் நடைபெற்ற நகரமன்ற கூட்ட விவரங்கள்.

| வ எண் | கூட்டம் நடைபெற்ற தேதி | நகரமன்ற கூட்ட விபரம் | மன்ற பொருள்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சாதாரண கூட்டம் | அவசர கூட்டம் | சிறப்பு கூட்டம் |
| 1. | 31.05. 2021 | சாதாரணக் கூட்டம் | 51 | - | - |
| 2. | 30.06.2021 | சாதாரணக் கூட்டம் | 10 | - | - |
| 3. | 30.07.2021 | சாதாரணக் கூட்டம் | 23 | - | - |
| 4. | 31.08.2021 | சாதாரணக் கூட்டம் | 20 | - | - |
| 5. | 13.09.2021 | சாதாரணக் கூட்டம் | 3 | - | - |
| 6. | 30.09.2021 | சாதாரணக் கூட்டம் | 12 | - | - |
| 7. | 12.10.2021 | சாதாரணக் கூட்டம் | - | 5 | - |
| 8. | 29.10.2021 | சாதாரணக் கூட்டம் | 7 | - | - |
| 9. | 16.11.2021 | அவசரக் கூட்டம் | - | 22 | - |
| 10. | 30.11.2021 | அவசரக் கூட்டம் | 6 | - | - |
| 11. | 15.12.2021 | அவசரக் கூட்டம் | - | 21 | - |
| 12. | 29.12.2021 | சாதாரணக் கூட்டம் | 29 | - | - |
| 13. | 25.01.2022 | அவசரக் கூட்டம் | 60 | - | - |
| 14. | 28.03.2022 | சாதாரணக் கூட்டம் | 12 | - | - |
| மொத்தம் | | | 233 | 48 | 281 |

## **2021 – 2022**

1) சாதாரண கூட்டம் – **11** முறை நடைபெற்றது. அதில் **233** பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) அவசரக்கூட்டம் – **3** முறை நடைபெற்றது. அதில் **48** பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) சிறப்புக்கூட்டம் நடைபெறவில்லை.

அறிக்கையாண்டில் சட்டப்படி அமைந்த குழுக்களுக்கு நடைபெற்ற கூட்டங்களில் கீழ்கண்ட விவரப்படி பொருள்கள் முடிவு செய்யப்பட்டது.

| வ எண் | குழுக்கள் | கூட்ட எண் | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| 1 | நியமனக்குழு | 1 | 2 |
| 2 | ஒப்பந்தக்குழு | – | – |
| 3 | உள்ளூர் திட்டக்குழு | – | – |
| 4 | வரி மேல்முறையீட்டுக் குழு | – | – |

## 5. இயங்கும் அலுவலர்கள்

### அ. ஆணையாளர்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சி ஆணையாளர்களாக பணிபுரிந்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2021 முதல் 31.03.2022 முடிய | *செல்வி.த.வ.சுபாசினி,எம்,ஏ., நகராட்சி ஆணையர்* |
| 2. | 01.04.2021 முதல் 31.03.2022 முடிய | திரு. *திருமதி.வ.சித்ரர்*, **B.E.**, நகராட்சி பொறியாளர் |
| 3 | 01.04.2021 முதல் 31.03.2022 முடிய | *திரு.மு.இராமகிருஷ்ணன், பொதுப்பணி மேற்பார்வையாளர்* |

### ஆ. மேலாளர்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சி மேலாளர்களாக பணிபுரிந்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2021 முதல் 31.03.2022 முடிய | திரு .R.பார்த்தீபன்,M.A.M.L., மேலாளர் |

### இ. கணக்கர்

இந்நகராட்சியில் கணக்கர் பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை.

### ஈ. இதர பணியாளர்கள் விபரம்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சி பணியாளர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | உதவியாளர்கள் | 1 | – | 1 |
| 2 | புள்ளிவிபரக் குறிப்பாளர் | 1 | 1 | – |
| 3 | இளநிலை உதவியாளர்கள் | 3 | 2 | 1 |
| 4 | தட்டச்சர் | – | – | – |
| 5 | பதிவறை எழுத்தர் | 1 | – | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – |
| 7 | இரவுக் காவலர் | – | – | – |

## 6. நிர்வாக செலவினம்

கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| இனம் | 2020 – 2021 | 2021 – 2022 |
|---|---|---|
| பொது, பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணியாளர்கள் | | |
| குடிநீர் விநியோக பணியாளர்கள் | | |
| ஓய்வூதிய செலவினங்கள் | | |
| மொத்தம் | | |

## 7. பொறியியல் பிரிவு

பொறியியல் பிரிவில் 01.04.2021 முதல் 31.03.2022 முடிய திரு. *திருமதி.வ.சித்ரர்*, **B.E.**, நகராட்சிப் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்கள்.

01.04.2021 முதல் 31.03.2022 முடிய திரு.எம். இராமகிருஷ்ணன் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார்.

இத்துறையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | மின்பணியாளர் | 1 |
| 2 | மின்பணி உதவியாளர் | 1 |
| 3 | குழாய் பொருத்துனர் | 2 |
| 4 | குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் காவலர் | 7 |

மேலும் இப்பிரிவில் கீழ்க்கண்ட பணியிடங்கள் காலியாக உள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | பணி ஆய்வர் | 1 |
| 2 | மின்பணி உதவியாளர் | 1 |
| 3 | குடிநீர் உதவியாளர் | 2 |
| 4 | குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் மற்றும் காவலர் | 1 |
| 5 | வாரச்சந்தைக் காவலர் | 1 |

## 8.சாலைகள் விபரம்

| வ எண் | சாலைகளின் தன்மை | கிலோ மீட்டர் |
|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலைகள் | 10.424 |
| 2 | தார் சாலைகள் | 78.172 |
| 3 | மெட்டல் சாலைகள் | 0.204 |
| 4 | ஜல்லி சாலைகள் | 22.168 |
| மொத்தம் | | 110.968 |

## 9. *திட்டப்பணிகளின் விபரங்கள்:–*

### 1 *கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு* திட்டம் :-

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2021–22 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் பின்வரும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது தற்சமயம் பூங்கா அமைக்கும் பணி மட்டும் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.05 ல் பாப்பாங்குளத்தில் புதியதாக பூங்கா அமைத்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது. | **42.30** |
| 2 | இந்நகராட்சிக்குப்பட்ட 3.555 கி.மீ. உள்ள 28 எண்ணிக்கையில் கொண்ட மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றும் பணிகளுக்கு பணிகள் நடைபெற்று வருகிறது. | 298.32 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட ஆலடி ஏரி, புது ஏரி, பதுவனேரி மற்றும் பிச்சனேரி ஆகிய நீர்நிலைகளை மேம்பாடு செய்தல் பணிகள் நடைபெற்று வருகிறது. | 570.50 |

### 2. மூலதன மானிய நிதி (CGF) 2021-22

இந்நகராட்சிக்குட்பட்ட செந்துறை சாலையில் ரூ. 380.00 இலட்சம் மதிப்பீட்டில் 20 KLD கொள்ளளவு கொண்ட Mechanical Type கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி நடைபெற்று தற்போது பணி முடியும் தருவாயில் உள்ளது.

### 3. தேசிய நகர சுகாதார இயக்கம் (NUHM) 2021–22

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜபுரத்தில்ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.

**4. 15வது மத்திய நிதிக்குழு மானியம் (15$^{TH}$ CFC 2021-22)**

- Tied Grant -ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை ம  ற்றும் குடிநீர் பணிகள் தொடர்பான 5 பணிகள் ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு தற்சமயம் அனைத்து பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- Untied Grant -ன் கீழ் குடிநீர் பணிகள் தொடர்பான 4 பணிகள் ரூ.30.23 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு தற்சமயம் அனைத்து பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**5. நமக்கு நாமே திட்டம் (NNT) 2021-22**

- இந்நகராட்சிக்குட்பட்ட செங்குந்தபுரம் 2 வது தெரு மற்றும் நடராஜன் நகரில் ரூ.13.15 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- இந்நகராட்சிக்குட்பட்ட 17 இடங்களில் ரூ.73.10 இலட்சம் மதிப்பீட்டில் சிறுமின் கோபுர மின் விளக்கு அமைத்தல் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**6. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MLACDS) 2021-22**

இந்நகராட்சிக்குட்பட்ட சன்னதி தெரு, ராஜா கொல்லை தெரு மற்றும் விசாலாட்சி நகரில் ஆகிய பகுதிகளில் ரூ.23.32 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள் புதுப்பிக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தற்சமயம் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 10. <u>குடிநீர் விநியோகம்</u>

இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர்களின் கீழ் இரண்டு குழாய் பொருத்துனர்கள் மற்றும் 8 நிரந்தர மற்றும் 13 தற்காலிக குடிநீர் பணியாளர்களை கொண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் குடிநீர் ஆதாரமாக கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் துறையின் மூலம் 1.00 லிட்டருக்கு ரூ.11.49 என்ற வீகிதத்தில் 1.44 MLD மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களான 70 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் 21 சிறிய வகை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு 1.44 MLD ஆக மொத்தம் 2.88 MLD நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 85 லிட்டர் வீதம் தினசரி 1.5 மணி நேரம் பாதுகாப்பான சுத்திகரிப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கு இந்நகராட்சியால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநீரின் தரத்தை ( Chlorination ) மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

**<u>இந்நகராட்சிப் பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மோட்டாருடன் கூடிய குடிநீர் வழங்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன:–</u>**

| வ.எண் | மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ள இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | சிதம்பரம் சாலை | 100000 |
| 2 | சின்னவளையம் | 100000 |
| 3 | காந்தி நகர் | 100000 |
| 4 | காமராஜபுரம் | 100000 |
| 5 | கரடிகுளம் | 100000 |
| 6 | கீழக்குடியிருப்பு | 100000 |
| 7 | மகிமைபுரம் இருளர் தெரு | 10000 |

| | | |
|---|---|---|
| 8 | மலங்கன்குடியிருப்பு | 60000 |
| 9 | மணக்கரை | 30000 |
| 10 | மணக்கரை பள்ளர் தெரு | 30000 |
| 11 | மணக்கரை உபதேசியர் தெரு | 10000 |
| 12 | மேலக்குடியிருப்பு | 100000 |
| 13 | அண்ணாசிலை அருகில் | 600000 |
| 14 | பாப்பாங்குளம் | 100000 |
| 15 | செங்குந்தபுரம் | 100000 |
| 16 | செங்குந்தபுரம் (பொன்விழா ஆண்டு) | 60000 |
| 17 | வேலாயுத நகர் | 100000 |
| 18 | வாரச்சந்தை | 100000 |
| 19 | சின்னவளையம் (IUDM) | 100000 |
| 20 | காமராஜபுரம் (வடக்குத் தெரு) | 100000 |
| 21 | வேலாயுத நகர் (IUDM) | 100000 |

**வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குதல்**

இந்நகராட்சியில் இந்நிதியாண்டில் 12951 சொத்து வரி விதிப்புகளில் உள்ள வீட்டுகளின் எண்ணிக்கையில் 6666 வீட்டுகளில் குடிநீர் இணைப்புகள் அளிக்கப்பட்டு இதில் Internal Plumbing திட்டத்தின் கீழ் மூலம் 174 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. தெரு விளக்கு பராமரிப்பு

இந்நகராட்சியால் 21 வார்டுகளிலும் பராமரிக்கப்பட்டு வந்த 1992 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரித்திட M/s.சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை, நிறுவனத்தினருக்கு ESCO திட்டத்தின் கீழ் தெரு விளக்கு மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தினசரி நகராட்சி மின்பணியாளர் மூலம் அனைத்து மின் விளக்குகளும் 98% செயல்பட்டு வருவதை உறுதி செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 12. தூய்மை இந்தியா திட்டம் :-

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015 – 16 ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 30319/P3/2015 நாள். 21/07/2015 ன் படி ரூ. 1024.10 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ( SBM grant 20%, State Fund 7%, Specisal SWM fund 63% ULB Share 10%) கலவை உரக்கிடங்கு அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உரக்கிடங்கு | :: | 1 |
| பரப்பளவு | :: | 4.20.0 ஹெக்டேர் |
| தொலைவு | :: | 4.00 கி.மீ. |
| தினசரி சேகரம்ஆகும் கழிவுகளின் அளவு | :: | 11.00 மெட்ரிக் டன் |

## 13. நகரமைப்பு

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் பணியிடம்-1 காலியாக உள்ளது.

## 14. கட்டிட அனுமதி

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், சென்னை-34க்கு இந்நகராட்சியில் வழங்கப்படும் கட்டிட அனுமதி பெறும் நபர்களிடமிருந்து தொழிலாளர் நலநிதி தொகை வங்கி வரைவோலையாக வசூலிக்கப்பட்டு மேற்படி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

## 15. பொது சுகாதாரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | துப்புரவு ஆய்வர் | - | 1 |
| 2. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | - | 2 |
| 3. | டிராக்டர் ஓட்டுநர் | – | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | – | 22 |

## 16.திடக்கழிவு மேலாண்மை

இந்நகராட்சியில் 21 வார்டுகளில் வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரிக்கும் பணி நடை பெற்று வருகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளை டாடா ஏசிஇ, டம்பர் பின், மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்து சென்று பிளாஸ்டிக் பொருட்களை தனியாக பிரித்து எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் 21 வார்டுகளை தனியார் மூலம் இப்பணியினை மேற்கொள்ளப்படுகிறது.

## 17. கொசு ஒழிப்பு

ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிக்கும் பொருட்டு நகர் முழுவதும் புகையான் **(Fogging Machine)** மருந்து அடிக்கப்பட்டது. சாக்கடையின் மூலம் கொசு புழு உற்பத்தி ஆகாமல் தடுக்க சாக்கடைகள் சுத்தம் செய்யப்பட்டு தினசரி **(Anti larval control Unit)** பணி மூலம் மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. **Anti larval Work –** கால்வாய் துப்புரவு பணி சிறப்பாக செயல்பாட்டில் உள்ளது. இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் ஏற்படுவதை தடுக்க, பொது மக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு நோயினால் ஏற்படும் விபரீதம் மற்றும் அதனை தடுக்கும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. துண்டு பிரசுரம் மூலம் பொது மக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டது. சிறப்பு களப்பணியாளர்கள் நியமித்து வீடுவீடாக சென்று கொசு உற்பத்தியாகும் உரல், தொட்டி, டயர், குளிர் சாதனபெட்டி போன்றவற்றில் உள்ள நீரை அப்புறப்படுத்தி நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. நகரில் உள்ள 21 வார்டுகளிலும் புகைமருந்து அடிக்கப்பட்டது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் 44 டெங்கு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படை மூலம் குடிநீர் தொட்டி, பானை போன்றவற்றில் டெமோபாஸ் மருந்து தெளிக்கப்பட்டு நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

## 18.பணியாளர் நலம்

துப்புரவு ஊழியர்களுக்கு நடப்பு நிதியாண்டிற்கான சீருடைகள் கையுறை, காலுறை, முகவுரை மற்றும் மழை கோட்டு மற்றும் காலணிகள் வாங்கி வழங்கப்பட்டது. துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவம் கவனிக்கப்பட்டு வருகிறது.

## 19.விழாக்களும் பண்டிகைகளும்

அறிக்கையாண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் பெரும் எண்ணிக்கையில் மக்களை ஈர்க்கும் திருவிழா ஏதும் நடைபெறவில்லை.

## 20.சாக்கடை புதைச் சாக்கடை

இந்நகராட்சியில் புதை சாக்கடை இல்லை. நகரில் உள்ள கழிவுநீர் சாக்கடை நீர் அப்புறப்படுத்தி கொசு மருந்து அடிக்கப்படுகிறது.

## 21.ஆதி திராவிடர் நலம்

ஆதி திராவிடர்/ பழங்குடியினர், ஈமச்சடங்கு தொகை நபர் ஒருவருக்கு ரூ.2500/- விகிதம் 60,000/- 24 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 22.ஆபத்தானதும் மற்றும் அருவருக்கத்தக்கதும்

இந்த அறிக்கையாண்டில் தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், இதர வியாபாரங்கள் முதலியவற்றிற்கு உரிமம் வழங்கப்பட்டு நடப்பு ஆண்டில் ரூ.79,790/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. முந்தைய வழக்கும் எதுவும் நிலுவையில் இல்லை.

உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் ஆய்வின்போது நாள்பட்ட உணவு ஸ்டாக்குகள், கெட்டுப்போன உணவு பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டு புதைக்கப்பட்டது. உரிமம் இல்லாத உணவு பொருள்கள், லேபிள் இல்லாத உணவு பொருள்கள் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது.

## 23. வருவாய் பிரிவு.

வருவாய் உதவியாளர்கள் ஒரு வருவாய் ஆய்வரின் மேற்பார்வையில் தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளனர். இந்நகராட்சியில் 3 வருவாய் உதவியாளர் பணியிடம் உள்ளது. அறிக்கையாண்டில் 3வருவாய் உதவியாளர்களும் பணியாற்றியுள்ளார்கள்.

### கட்டிடத்தின் பயன்பாடு

தொழிலக பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் இருமடங்கு அடிப்படை மதிப்பு வணிக பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் நர்சிங் ஹோம்கள் / கல்யாண மண்டபம் போன்றவை மும்மடங்கு அடிப்படை மதிப்பு

### உச்ச வரம்பு

சொத்துவரி செலுத்தவோருக்கு சொத்துவரி உயர்வு மிக அதிகமாக இருக்கக்கூடாது. என்று கருத்தின் அடிப்படையில் சொத்துவரி சீராய்வு திருத்தியதின் பேரில் உயர்த்தப்படும் வரிக்கான உச்ச வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. குடியிருப்பு கட்டிடங்கள் சொத்துவரி சீராய்வுக்கு முன்பு இருந்த (கட்டிட உரிமையாளர் பயன்பாடு) வரியில் 10 சதவீதம் மிகாமல்.
2. குடியிருப்பு கட்டிடங்கள் (வாடகைக்கு விடப்பட்டவை) முந்தை வரியில் 50 சதவீதம் மிகாமல்.
3. வணிக பயன்பாடு கட்டிடங்கள் முந்தைய வரியில் 100 சதவீதம் மிகாமல்.
4. தொழிலக பயன்பாடு கட்டிடங்கள் முந்தைய வரியில் 150 சதவீதம் மிகாமல்.

## 26.தொழில் வரி

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 124டி மற்றும் வர்த்தகம், தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு தொழில்வரி வசூல் செய்யும் விதிகள்1999 விதி 16-ன்படி, ஜெயங்கொண்டம் நகராட்சியில் ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரும் தொழில் வரியினை 01.10.2018 முதல் (2018-19 இரண்டாம்

அரையாண்டு முதல்) 25% உயர்வு செய்திட செயங்கொண்டம் நகராட்சி தீர்மான எண்.09 நாள் 25.05.2018ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி 01.10.2018 முதல் (2018-19 இரண்டாம் அரையாண்டு முதல்) பின்வருமாறு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | 6 மாத சராசரி வருமானம் | ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொழில்வரி தொகை (ரு) | (25% சதவீகிதம் ) 01.10.18 முதல் திருத்திய தொழில்வரி தொகை (ரு) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | |
| 2 | 21001 முதல் 30000 வரை | 122/- | 160/- |
| 3 | 30001 முதல் 45000 வரை | 310/- | 390/- |
| 4 | 45001 முதல் 60000 வரை | 610/- | 770/- |
| 5 | 60001 முதல் 75000 வரை | 920/- | 1150/- |
| 6 | 75001 மற்றும் அதற்கு மேல் | 1220/- | 1250/- |

## 27.குத்தகை

அரசு ஆணை எண். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.09.2008ன் படி மூன்று ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்தங்கள் போன்றவற்றை குத்தகைக்கு விட எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் மன்ற தீர்மான நகல் மற்றும் திருத்திய குத்தகை நிபந்தனைகள் விபரம்.

- அரசாணையை மன்ற பதிவுக்கு வைக்கப்பட்டு மன்றம் தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- அரசாணைப்படி ஓராண்டு குத்தகை இனத்தினை மூன்றாண்டு குத்தகை இனமாக மாற்றி தீர்மானம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## சந்தைகள், மீன்மார்கெட், ஆடு, மாடு வதை செய்யும் இடங்கள்.

இந்நகராட்சியில் பிரதி வாரம் திங்கள் கிழமையில் வாரச்சந்தையும் மற்றும் தினசரி மார்கெட்டும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரத்தில் 9 ஆடு இறைச்சி கடைகளும் 4 மாட்டு இறைச்சி கடைகளும் , மீன் மார்கெட் ஒன்றும் உள்ளன.

## 28. வழக்குகள்

சொத்துவரி சம்பந்தமாக நகராட்சியால் தொடரப்பட்ட வழக்குகள் எதுவும் இல்லை.

## 29. பொதுக்கூட்ட இடம்

பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு ஏதுவாக சன்னதி தெரு சாலையில் வசதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 30. தகவல் மையம்

பொது மக்களின் தேவைகளை உடனுடக்குடன் பூர்த்தி செய்வதற்காக நகராட்சி அலுவலகத்தில் தகவல் மையம் செயல்பட்டு வருகிறது. இத்துடன் அம்மா சேவைமையம் **(Amma Call Centre)** செயல்படுகிறது.

## 31. வாகனம்

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு போலிரோ வாகனம் ஒன்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலை குப்பை சேகரிப்பு | :: | மூன்று சக்கர சைக்கிள் – 5 எண்ணிக்கை |
| தள்ளு வண்டிகள் | :: | 42 |
| இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு | | |
| மினி லாரிகள் | :: | 1 |
| டம்பர் பிளேசர் | :: | 1 |
| டிராக்டர் | :: | 1 |
| JCB | :: | 1 |
| காம்பாக்ட் லாரி | :: | 1 |
| டிப்பர் லாரி | :: | 1 |

## 32. சிறுசேமிப்பு

சிறுசேமிப்பு வசூல் இலக்கு ஏதும் நிர்ணயம் செய்யப்பட வில்லை. முன்னாள் படைவீரர் நல கொடிகள் வழங்கப்பட்டு பொது மக்களிடம் விநியோகிக்கப்படுகின்றன.

## 33. தணிக்கைத் தடைகள்

அறிக்கையாண்டில் முடிவில் இருந்த தணிக்கை தடைகள் **546** ஆகும்.

## 34. அம்மா உணவகம்

அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.09.2014ன்படி கூலித்தொழிலாளர்கள் மற்றும் அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் சுத்தமான உணவு கிடைக்கும் பொருட்டு மலிவு விலையில் **"அம்மா உணவகம்"** நடத்த ஆணையிட்டுள்ளதன்படி ஜெயங்கொண்டம் நகராட்சி பகுதியில் அண்ணாசிலை அருகே புதியதாக **"அம்மா உணவகம்"** கட்டப்பட்டுள்ளது. **"அம்மா உணவகம்"** நல்லமுறையில் நடைபெறவும், கொள்முதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை சிறப்பாக மேற்கொள்ளவும் இந்நகராட்சி அலுவலர்களுக்கு பொறுப்புகளும் கடமைகளும் நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. **"அம்மா உணவகம்"** நல்ல தரமான முறையில் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. 2021-2022ம் ஆண்டின் அம்மா உணவகத்தின் வரவு **ரூ.3.73/- இலட்சம்** செலவு **ரூ.14.11/- இலட்சம்** ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

## 36.தெருவோர வியாபாரிகள் (Support to Urban Street Vendors)

இந்நகராட்சியில் மேற்படி திட்டத்தின்கீழ் 2021-2022 ம் ஆண்டு வரை 110 சாலையோர வியாபாரிகள் Virtue NGO மூலமாக கணக்கெடுப்பு செய்யப்பட்டு அதில் 100 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்குரிய Committee அமைக்கப்பட்டு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 37. குடிசைப் பகுதிகள் விபரம்

இந்நகராட்சியில் **2011**ம் ஆண்டில் நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை **33945** ஆகும்.

**2021**ம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் குடிசைப் பகுதிகள் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | வார்டு எண் | பெயர் |
|---|---|---|
| 1. | 1 | கீழக்குடியிருப்பு |
| 2. | 2 | மாந்தோப்பு தெரு |
| 3. | 3 | மலங்கண்குடியிருப்பு |
| 4. | 4 | சின்னவளையம் |
| 5. | 5 | பாப்பாங்குளம் |
| 6. | 6 | கீழ அரிசன தெரு |
| 7. | 11 | காந்தி நகர் |
| 8. | 12 | வடக்கு அரிசன தெரு |
| 9. | 13 | காமராஜபுரம் |

## <u>பொது குறிப்பு :</u>

இந்நகராட்சி பொது மக்களுக்கு அடிப்படை தேவைகள் குடிநீர் விநியோகம், விளக்கு வசதி, சாலை வசதி தெருக்களை சுத்தப்படுத்துதல் மற்றும் இதர பொது சுகாதாரப்பணிகளை நல்ல முறையில் அளித்து வருகிறது. அரசினால் வழங்கப்படும் கடன் உதவி தொகைகள், மான்ய தொகைகளை கொண்டு பொதுமக்களின் நலனுக்காக பணிகளை நல்ல முறையில் செய்து கொடுத்துள்ளது.

நகராட்சி நிர்வாகம் செவ்வனே நடைபெற அவ்வப்போது தேவையான ஆலோசனை வழங்கிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களுக்கும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அரியலூர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன.

நகராட்சியின் நிர்வாகம் பொதுவாக நல்லமுறையில் நடைபெற ஒத்துழைப்பை அளித்த பொறியாளர், மேலாளர், மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக்கொள்வதுடன் எதிர்வரும் ஆண்டிலும் இந்நகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் இயங்கிட பூரண ஒத்துழைப்பு நல்கிடவேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**